நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, சாத்தூர்.

சி.சி.எண். 75/2022

பெயர் – முத்துசெல்வி (PW1)

நாள் – 11.05.2023

மனு அனுமதிக்கப்பட்டதன் பேரிலும் சத்திய பிரமாணத்தின் பேரிலும் செய்யப்பட்ட கு.வி எதிரி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நான் வந்த டாடா ஏசி வாகனத்தில் எந்த பக்கத்தில் உட்கார்ந்து இருந்தேன் என்றால் பின்பக்கத்தில் உட்கார்ந்து இருந்தேன். அந்த பின்பக்கத்தில் தார்பாய் கொண்டு மூடப்பட்டு இருந்தது என்றால் சரிதான். நான் தார்பாய்குள் உட்கார்ந்திருந்ததால் எதிரே வந்த வாகனம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆனால் இரண்டுபக்கமும் பார்த்துகொண்டேதான் வந்தேன். வாகனம் இடிக்கும் பொழுது நான் பக்கவாட்டில் உட்கார்ந்து இருந்ததால் ஓட்டை வழியாக நான் மோதிய வாகனத்தை பார்த்தேன். விபத்து ஏற்பட்டதற்கு பிறகு தான் நான் வாகனத்தை பார்த்தேன் என்றாலும் அதற்கு முன்பாக பார்க்கவில்லை என்றாலும் சரிதான். லாரி ஓட்டுனரை நான் பார்த்தேனா அவர் ஓடும் போது நான் பார்த்தேன். போலிசார் விசாரணையில் லாரி டிரைவர் ஓடும் போது அவரை பார்த்ததாக நான் சொன்னேனா என்றால் பதட்டத்தில் சொல்லியிருப்பேன். லாரி ஓட்டுனர் மற்றும் லாரியின் விவரத்தை போலிசார் காவல் நிலையத்தில் வைத்து சொன்னபிறகு தான் தெரியும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் ஆம்புலன்ஸ் வந்தது என்றாலும் நிறைய பேர்கள் கூடிவிட்டார்கள் என்றாலும் சரிதான். எங்களுக்கு உதவிசெய்தவர் ஊராட்சி மன்ற தலைவர் என்று சொன்னார்கள். நாங்கள் சம்பவ இடத்தில் இருந்தபோது போலிசார் வந்தாரர்களா என்றால் சம்பவ இடத்திற்கு வரவில்லை மருத்துவமனைக்கு அனைத்து போலிசாரும் வந்துவிட்டார்கள். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தமிழ் தெரியும். ஆனால் ஆங்கிலம் தெரியாது. புகார் மனுவை நான் தான் எழுதினேனா என்றால் நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதினார்கள். நான் கையெழுத்து மட்டும் போட்டேன். எங்கு வைத்து போலிசாரிடம் சொன்னேன் என்றால் கோவில்பட்டி ஜி.ஹச்சில்வைத்து சொன்னேன். நான் புகாரை படித்து பார்த்தேனா என்றால் காயம்பட்டவர்களுக்கு சிகிச்சை பெறுவதற்குதான் முயற்சித்தேன். படித்து பார்க்கவில்லை. விபத்து நடந்ததாக சொல்லப்படும் வளைவான பகுதி என்றால் சரிதான்.

விபத்துநடந்தவுடன் நான் மயங்கிவிட்டேன் என்றால் சரியல்ல. தெளிவாகவே இருந்தேன். பத்திரிக்கையாளர்கள் வந்து புகைப்படும் எடுக்ககூடும். நான் தெளிவாகவே இருந்தேன். நாங்கள் வந்த டாடா ஏசி வாகனத்தில் ஆட்களை ஏற்றிவர அனுமதி கிடையாது என்றால் சரிதான். நாங்கள் வந்த வாகனத்தில் நிறைய பேர்கள் இருந்தோம் என்றால் சரியல்ல. ஒரு பத்து பெரியாட்களும், 9 சின்ன பிள்ளைகளும் இருந்தார்கள். கோவிலுக்கு தேவையான பொருட்களை அந்த வாகனத்தில் வைத்திருந்தோம் என்றால் சரிதான். வாகன விபத்திற்கு நாங்கள் பயணம் செய்த டாடா ஏசி வாகனத்தின் ஓட்டுனர்தான் காரணம் என்றால் சரியல்ல. அவருடைய கவனக்குறைவினாலும், சரக்கு வாகனத்தில் ஆட்களை ஏற்றிவந்ததாலும் தான் உயிர் இழப்பும், காயமும் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈடு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈட்டு தொகை அதிகமாக கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் இந்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, சாத்தூர்.

சி.சி.எண். 75/2022

பெயர் – ஈஸ்வரன் (PW3)

நாள் – 11.05.2023

மனு அனுமதிக்கப்பட்டதன் பேரிலும் சத்திய பிரமாணத்தின் பேரிலும் செய்யப்பட்ட கு.வி
எதிரி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நான் வந்த டாடா ஏசி வாகனத்தில் எந்த பகுதியில் உட்கார்ந்து இருந்தேன் என்றால் பின்பகுதியில் இருந்தேன். மேல் பகுதியில் தார்பாய் கொண்டு மூடப்பட்டு இருந்தது என்றால் சரிதான். தார்பாய் கொண்டு வாகனம் மூடப்பட்டு இருந்ததால் வாகனத்திற்கு முன்பாக என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரில் வந்த வாகனம் எவ்வாறு வந்தது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் வந்த டாடா ஏசி வாகனத்தில் இடித்த வாகனத்தை ஓட்டி வந்த நபர் யார் என்று தெரியாது என்றால் அந்த இடத்தில் ஆள் யாரும் இல்லை. சம்பவ இடத்தில் ஆட்கள் கூடி விட்டார்கள் என்றால் சரிதான். அப்போது போலிசார் அங்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். என்ன நடந்தது என்று போலிசார் அங்கு வைத்தே கேட்டு எழுதி வாங்கி கொண்டார்கள் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் வைத்து தான் எழுதி வாங்கினார்கள். நாங்கள் சென்ற டாடாஏசி வாகனத்தில் அட்களை ஏற்றிசெல்வதற்கு அனுமதி இல்லை என்றால் சரிதான். நாங்கள் சென்ற வாகனத்தில் அதிகமான ஆட்களும், பொருட்களும் இருந்தன என்றால் சரிதான். அந்த விபத்து ஆனது முழுக்க முழுக்க நாங்கள் வந்த டாடா ஏசி வாகனத்தின் ஓட்டுனரால்தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்தில் காயம்பட்ட நபர்கள் மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈடு வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈட்டு தொகை அதிகமாக கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் இந்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.